பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 08 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நியூசிலாந்தின் வெலிங்டனில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு இன்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

2. நாடு முழுவதும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாளை முதல் வரும் 15-ஆம் தேதிவரை நடைபெறும்.

3. ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் ஏதும் இல்லை என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

4. அனைத்து மக்களும் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் பண்பாட்டு விழாக்கள் கொண்டாடப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. பாரிஸ் ஒலிம்பிக் ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இந்தியாவின் நீரஜ்சோப்ரா பங்கேற்கிறார்.

---- இனி விரிவான செய்திகள் --

<<<<<<>>>>>

நியூசிலாந்து சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி, இன்று வெலிங்டன் ரயில் நிலையத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதைத்தொடர்ந்து, வெலிங்டனில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் திருமதி திரௌபதி முர்மு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இன்று அந்நாட்டு கவர்னர் ஜெனரல் டாமி **cindy kiro,** பிரதமர் திரு கிறிஸ்டோபர் **Luxon** ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

<<<<<<>>>>>

வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் அறிமுகம் செய்யப்படுகிறது.

சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு இதனை தாக்கல் செய்யவிருக்கிறார்.

மாநில வக்ஃப் வாரியங்களில் அதிகாரம், செயல்பாடு, பதிவு, சொத்து மதிப்பீடு உள்ளிட்டவற்றை இந்த திருத்த மசோதா கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, மக்களவை இன்று கூடியதும், இந்த திருத்த மசோதா தொடர்பாக விவாதம் நடைபெற்றது.

காங்கிரஸ் உறுப்பினர் திரு பிரமோத் திவாரி, இதுதொடர்பாக மத்திய அரசு அனைத்துக்கட்சி கூட்டத்தை நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்து பேசிய சமாஜ்வாதி கட்சி உறுப்பினர் திரு ராஜீவ்குமார் ராய், இந்த திருத்த மசோதாவை தங்கள் கட்சி எதிர்க்கும் என்று தெரிவித்தார்.

இந்த மசோதாவை நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், அது அளிக்கும் பரிந்துரைகளை ஏற்க வேண்டும் என்றும் தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் பிரிவு உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே தெரிவித்துள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தகுதிநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலங்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இன்று காலை அவை கூடியபோது, எதிர்க்கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இந்த விவகாரம் தொடர்பாக பேச முற்பட்டபோது, அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து, காங்கிரஸ், திமுக, ராஷ்ட்ரிய ஜனதாதளம், உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.

எதிர்க்கட்சிகளின் இந்த நடவடிக்கைக்கு மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கண்டனம் தெரிவித்தார்.

வினேஷ் போகத்தின் விவகாரம் தொடர்பாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மட்டுமல்லாமல், நாடே வேதனையில் ஆழ்ந்துள்ளதாக கூறினார்.

பதக்கம் வென்றதற்கான அனைத்து மரியாதைகளும் வினேஷ் போகத்துக்கு வழங்கப்படும் என்று ஹரியானா மாநில அரசு அறிவித்துள்ளதை திரு ஜெக்தீப் தங்கர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளை கொண்டாடியுள்ள நிலையில், இந்த ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி, இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாளை முதல் வரும் 15-ஆம் தேதிவரை நடைபெறும்.

2022-ஆம் ஆண்டு தொடங்கிய இந்த இயக்கத்தில், 23 கோடி வீடுகளில் தேசியக் கொடி ஏற்றப்பட்டதாகவும், ஆறு கோடி பேர் செல்ஃபி எடுத்து இணையதளத்தில் பதிவிட்டுள்ளதாகவும் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

2023-ல் பத்து கோடி பேர் வீடுகளில் தேசியக் கொடி ஏற்றியபடி செல்ஃபி எடுத்து பதிவிட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த ஆண்டும் இந்த நடைமுறையை சிறப்பிக்க வேண்டுமாறு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

<<<<<<>>>>>

சுதந்திர தினத்தன்று புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து காலை மணி 9.17-க்கு இது ஏவப்படும் என்று அது கூறியுள்ளது.

பேரிடர் கண்காணிப்பு, தீ விபத்து மற்றும் வெள்ள அபாயங்களை கண்டறிதல், புற ஊதா கதிர்வீச்சு அளவீடு தொடர்பாக இதன் செயல்பாடு இருக்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்த **‘EOS-08** செயற்கைக்கோளை தாங்கி செல்லும் **‘SSLV-D3** விண்கலம் குறைவான செலவில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம், பல்வேறு சிறிய ரக செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த முடியும் என்றும் இஸ்ரோ கூறியுள்ளது.

<<<<<<>>>>>

மேற்குவங்க முன்னாள் முதலமைச்சர் **Buddhadeb Bhattacharjee** இன்று கொல்கத்தாவில் காலமானார். அவருக்கு வயது 80.

உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், இன்று காலை அவரது வீட்டில் உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த இவர், இரண்டாயிரமாவது ஆண்டு முதல், 2011-ஆம் ஆண்டு வரை மேற்குவங்க முதலமைச்சராக பதவி வகித்தார்.

**Buddhadeb Bhattacharjee** மறைவுக்கு மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார்.

*<<<<<<>>>>>*

ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் ஏதும் இல்லை என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டுக்கான மூன்றாவது நிதிக்கொள்கை கூட்டத்தில் பங்கேற்ற ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாஸ், ரெப்போ வட்டி விகிதம் ஆறு புள்ளி ஐந்தாக தொடரும் என்று தெரிவித்தார்.

வளர்ச்சியை ஊக்குவிக்கவும், பணவீக்கத்தை குறைக்கும் நடவடிக்கைகளில் நிதிக்கொள்கை குழு கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நடப்பு நிதியாண்டின் நான்காவது நிதிக்கொள்கை கூட்டம் வரும் அக்டோபர் ஏழாம் தேதிமுதல், ஒன்பதாம் தேதிவரை நடைபெறும் என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

*<<<<<<>>>>>*

அனைத்து மக்களும் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் பண்பாட்டு விழாக்கள் கொண்டாடப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மாமதுரை விழாவினை காணொலி காட்சி வாயிலாக இன்று தொடங்கிவைத்த அவர், சாதிமத வேறுபாடுகளுக்கு இடமின்றி இதுபோன்ற விழாக்கள் நடத்தப்பட வேண்டும் என்றார்.

தமிழ் மொழி, தமிழ் இனம் என்ற பெருமிதம் உள்ளவர்களாக எதிர்கால தலைமுறை வளர வேண்டும் என்று திரு மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.

*<<<<<<>>>>>*

கோவை மாவட்டத்தில் உள்ள ஆழியார் அணை நிரம்பியதை அடுத்து 11 மதகுகள் வழியாக உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ஹரிஹரன் - 35 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

மேற்காசியாவில் பதற்றம் நீடிப்பதால் ஈரான் மற்றும் லெபனான் வான் எல்லையை தவிர்க்குமாறு பிரிட்டன் மற்றும் எகிப்து நாடுகள் தங்களது விமான நிறுவனங்களை கேட்டுக் கொண்டுள்ளது.

ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பை சேர்ந்த முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டதையடுத்து, அந்த பிராந்தியத்தில் போர் அபாயம் ஏற்பட்டுள்ளதால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக உலக அளவில் பல விமான நிறுவனங்கள் ஈரான் மற்றும் லெபனான் வான் எல்லையை தவிர்த்து வருகின்றன.

டெல்அவிவ் நகருக்கான விமான சேவைகளை தற்காலிகமாக ரத்து செய்துள்ள அமெரிக்காவை சேர்ந்த யுனைடெட் ஏர்லைன்ஸ் நிறுவனம் இந்த ரத்து தொடர்வதாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில், டெஹ்ரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதற்கு சவுதி அரேபியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது ஈரான் நாட்டின் இறையாண்மையை மீறும் செயல் என்று சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

பங்ளாதேஷின் பிரபல பொருளாதார நிபுணரும், நோபல் பரிசு பெற்றவருமான பேராசிரியர் முகமது யூனூஸ் தலைமையில் இடைக்கால அரசு இன்று பதவியேற்கிறது.

டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசிய ராணுவ தளபதி ஜெனரல் வாக்கர் உஸ் ஸமான் இதனை தெரிவித்தார்.

இதற்கிடையே, பங்களாதேஷில் உள்ள இந்திய விசா மையம் காலவரையின்றி மூடப்படுவதாகவும், அதேநேரத்தில் அதன் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழல் காரணமாக, இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த விண்ணப்பத் தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

பிரிட்டனின் சில பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியான நிலையில், அங்குள்ள பல நகரங்களில் அச்சம்பவங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

லண்டன், பிர்மிங்ஹாம், லிவர்ஃபுல் உள்ளிட்ட நகரங்களில் அதிக அளவில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

தவறாக வெளியான ஒரு செய்தியின் அடிப்படையில் இந்த வன்முறை சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

ஜிம்பாப்வேயில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வறட்சி காரணமாக, அதிக அளவில் பயிர் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் 76 லட்சம் பேர் பட்டினால் வாடும் அபாயம் உருவாகியிருப்பதாகவும் ஐ நா தெரிவித்துள்ளது.

எல்நினோ வானிலை மாற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள இப்பாதிப்பினால் அந்நாட்டில் உணவு பாதுகாப்பு நிலைமை சீர்குலைந்திருப்பதாகவும், அந்நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலையை எட்டியிருப்பதாகவும் ஐ நா பொதுச்செயலாளரின் செய்தித்தொடர்பாளர் திரு **Farhan Haq** செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் அந்நாட்டில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் இந்தியா இன்று ஸ்பெயின் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இந்திய நேரப்படி மலை மணி 5-30-க்கு தொடங்குகிறது.

ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இந்தியாவின் நீரஜ்சோப்ரா பங்கேற்கிறார்.

ஆடவருக்கான 57 கிலோ மல்யுத்தப் போட்டியில் அமன் ஷெராவட்டும், மகளிர் பிரிவில் அன்ஷூவும் பங்கேற்கின்றனர்.

<<<<<<>>>>>